பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 05 2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா – பாகிஸ்தான் இடையிலான அனைத்து பிரச்சினைகளுக்கும் இருதரப்பு அணுகுமுறை மூலமாகவே தீர்வுகாணப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உறுதிபட தெரிவித்துள்ளார்.
- மத்திய அமெரிக்க நாடான **Honduras**- உடனான பொருளாதார ஒத்துழைப்பு கடந்த 30 ஆண்டுகளில் வலுப்பெற்றிருப்பதாக இந்தியா கூறியுள்ளது.
- ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நாட்டின் பல பகுதிகளில் இன்று தேசியக்கொடி பேரணி நடைபெற்றது.
- ரஷ்யா - யுக்ரைன் பிரச்சினைகளுக்கு ராணுவ ரீதியாக தீர்வு காண முடியாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.
- பிரான்சில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – அமெரிக்காவின் **Robart Galloway** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

இந்தியா – பாகிஸ்தான் இடையிலான அனைத்து பிரச்சினைகளுக்கும் இருதரப்பு அணுகுமுறை மூலமாகவே தீர்வுகாணப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உறுதிபட தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாகிஸ்தான், காஷ்மீரில் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள இந்திய பகுதியைவிட்டு வெளியேறுமாறு அந்நாட்டிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்று தெரிவித்தார்.

காஷ்மீரை விட்டு பாகிஸ்தான் வெளியேற வேண்டும் என்பதில் பல ஆண்டுகளாக தேசிய அளவில் கருத்தொற்றுமை நிலவி வருவதாக தெரிவித்த திரு ஜெய்சங்கர், இந்தியாவின் நிலைப்பாட்டில் நிச்சயமாக எந்தவொரு மாற்றமும் இல்லை என்றும் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி அண்மையில் பேசியபோது, தீவிரவாதத்தை நிறுத்துவது குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் கூறினார்.

பாகிஸ்தானில் உள்ள முக்கிய தீவிரவாதிகளின் பட்டியலை இந்தியா தயாரித்துள்ளதாகவும், அவர்களை சட்ட ரீதியாக முறைப்படி இந்தியாவிடம் ஒப்படைக்க அந்நாடு முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பகுதியில் உள்ள அனைத்து தீவிரவாத முகாம்களும் அழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் இந்தியா உறுதியுடன் இருப்பதாகவும் அவர் கூறினார்.

சண்டை நிறுத்தம் பற்றி குறிப்பிட்ட திரு ஜெய்சங்கர், தீவிரவாதிகளின் இருப்பிடங்களை குறிவைத்து மட்டுமே ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது தாக்குதல் நடத்தப்பட்டதாக பாகிஸ்தானிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

தீவிரவாதிகளை குறிவைத்து இந்தியா நடத்தும் தாக்குதலின்போது அந்நாட்டு ராணுவம் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக, இந்தியா பல முறை வலியுறுத்தியபோதும், அந்த கோரிக்கையை பாகிஸ்தான் நிராகரித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 10-ஆம் தேதியன்று நடத்தப்பட்ட தாக்குதலில், பாகிஸ்தானில் உள்ள ராணுவ மற்றும் விமான தளங்கள் கடுமையான சேதத்தை சந்தித்ததாகவும் அவர் கூறினார்.

சிந்துநதி ஒப்பந்தம் குறித்து தெரிவித்த திரு ஜெய்சங்கர், பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்தும் வரை, இந்த விஷயத்தில் இந்திய எடுத்தள்ள முடிவு குறித்து மறுபரிசீலனை செய்யப்பட மாட்டாது என்றும் கூறினார்.

இந்திய – அமெரிக்க வர்த்தகம் பற்றி குறிப்பிட்ட அவர், இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மை தரக்கூடிய வகையில் வர்த்தகம் அமையும் என்றும் தெரிவித்தார்.

இந்தியா – அமெரிக்கா வர்த்தகம் குறித்து தவறான புரிதல்களை கைவிட வேண்டும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<<>>>>>

மத்திய அமெரிக்க நாடான **Honduras**-வுடன் கடந்த 30 ஆண்டுகளில் பொருளாதார ஒத்துழைப்பு வலுப்பெற்றிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று **Honduras'** நாட்டின் தூதரக திறப்பு விழாவில் உரையாற்றிய அவர், இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 300 மில்லியன் டாலர் அளவுக்கு உயர்ந்திருப்பதாக தெரிவித்தார்.

பஹல்காமில் இந்தியாவின் அப்பாவி சுற்றுலா பயணிகள் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து **'Honduras'** அறிக்கை வெளியிட்டதாகவும் கூறினார்.

தலைநகர் தில்லியில் அந்நாட்டின் தூதரகம் அமைவது இருதரப்பு வர்த்தகத்தை பெரிதும் ஊக்குவிக்கும் என்றும், இரண்டு நாடுகளிலும் உள்ள தொழில் அதிபர்கள் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கும் வழிவகுக்கும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு இருதரப்பிலும் வலுப்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மருந்துப்பொருட்கள், ஜவுளி, ஆட்டோ மொபைல் இயந்திரங்கள் காபி, தோல் பொருட்கள் உள்ளிட்டவற்றின் வர்த்தகம் பெருகும் என்றும் அவர் கூறினார்.

வேளாண்மை, தொழில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மருத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தயாரிப்புத்துறையில் அதிக அளவில் வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இயற்கை பேரிடர்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கான எச்சரிக்கை கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை இந்தியாவும், **Honduras** ஈடுபட்டிருப்பதாக டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

**<<<<<<>>>>>**

குஜராத் மாநிலத்தில் பாசன கட்டமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில், ஆறு புதிய தடுப்பணைகளை அம்மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு **Kunvargi Bavaliya** திறந்துவைத்தார்.

காந்தி நகர் மாவட்டத்தில் உள்ள 30-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாசனவசதி பெறும் வகையில் இந்த தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

**Meshwo** மற்றும் **Khri** ஆறுகளின் குறுக்கே 18 கோடியே ஏழு லட்சம் ரூபாய் செலவில் இந்த தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு **Bavaliya** மாநிலத்தின் அனைத்துப்பகுதிகளுக்கும் பாசன வசதி கிடைக்க வேண்டும் என்பதில் மாநில அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக கூறினார்.

எதிர்காலத்தில் கூடுதலாக தடுப்பணைகள் கட்டுவதற்கான திட்டங்களையும் அரசு மேற்கொள்ள உள்ளதாக திரு **Bavaliya** தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று தேசியக்கொடி பேரணி நடைபெற்றது.

முப்படைகளின் வலிமையை போற்றும் வகையில் நடைபெற்றுவரும் இப்பேரணிகளில் அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் பங்கேற்றுள்ளன.

தில்லியில் முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா மற்றும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மூவர்ண கொடி யாத்திரையில் கலந்துகொண்டு நாட்டின் பெருமையையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தினர்.

ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகரில் நடைபெற்ற யாத்திரையில் அதிக அளவில் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட மக்கள் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் வகையில், பாரத அன்னைக்கு வெற்றி என முழக்கமிட்டனர்.

கத்துவாவில் நடைபெற்ற எழுச்சிமிகு தேசிய கொடி யாத்திரையில் வந்தே மாதரம் என மக்கள் முழக்கமிட்டனர்.

ஜார்கண்ட் மாநிலத்தில் ஷாஹிப் கஞ்ச், தன்பாத், சத்ரா, பாலமு மாவட்டங்களில் முப்படையினரின் வலிமையை போற்றும் வகையில் யாத்திரை நடைபெற்றது.

ராஜஸ்தான் மாநிலத்தில் முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா, துணைமுதலமைச்சர் திருமதி திவ்யா குமாரி ஆகியோர் முப்படையினரின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றும் வகையில் தேசிய கொடியை ஏந்தி யாத்திரையில் கலந்துகொண்டனர்.

ஹரியானா மாநிலம் சோனிபட், உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியா ஆகிய இடங்களிலும் திரங்கா யாத்திரை நடைபெற்றது.

கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறுவர்கள் மூவர்ணம் பதித்த ஆடைகளை உடுத்தி, யாத்திரையில் கலந்துகொண்டனர்.

பிஜேபி-யின் மூத்த தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் இந்த யாத்திரையை வழிநடத்தி சென்றனர்.

தமிழகத்தின் திருச்சியில் பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

வைஷாக புத்த பூர்ணிமா நாட்டின் கலாச்சார பண்டிகை என்று மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வைஷாக புத்த பூர்ணிமா தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்நாள் புத்தமதம் சார்ந்த பண்டிகை என்று கருத முடியாது என்றும், அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைப்பதற்கான விழா என்றும் குறிப்பிட்டார்.

கௌதம புத்தரின் போதனைகள் உலக அளவில் கோடிக்கணக்கான மக்களை ஈர்த்திருப்பதாக அவர் கூறினார்.

புத்தரின் காலம் கடந்து நிற்கும் போதனைகளையும், செய்திகளையும் அனைத்துத் தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்கும் பொறுப்பு நமக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் பிறந்த புத்தரின் சிந்தனைகள் உலக அளவில் பண்பாட்டையும், அமைதியையும் ஏற்படுத்தி, ஆசிய மண்டலத்தில் நாகரீகத்தின் வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு ஷெகாவத் குறிப்பிட்டார்.

புத்தரின் புராதன சின்னங்கள், சிற்பங்கள் உள்ளிட்ட கலை வடிவங்களை பாதுகாப்பதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, புத்தரின் அறிவுரைகள் மதத்தை கடந்து, ஒவ்வொருவரின் சமுதாய கடமையையும் வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

புத்தர் அமைதியின் சின்னமாகவும், மக்களின் நம்பிக்கையாகவும் விளங்கி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் போதித்த நல்லிணக்கமும், அமைதியான வாழ்க்கை முறையும் நம் வாழ்வை வலுப்படுத்தும் என்றும் திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.

**<<<<<<>>>>>**

ரஷ்யா – யுக்ரைன் பிரச்சினைகளுக்கு ராணுவ ரீதியாக எவ்வித தீர்வும் காண முடியாது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மொராக்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

துருக்கியில் நடைபெற்ற நேட்டோ அமைப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பேச்சுவார்த்தைகள் மூலமே இருநாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும் என்று அமெரிக்கா நம்புவதாக கூறினார்.

இருதரப்பிலும் சமரசம் செய்வதற்கான முயற்சிகளை அமெரிக்கா தொடர்ந்து முன்னெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

துருக்கி இஸ்தான்புல் நகரில் நடைபெறும் ரஷ்யா — யுக்ரைன் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமான பலனை அளிக்கும் என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி, துருக்கி தலைநகர் இஸ்தான்புல் சென்றுள்ளார்.

அன்காரா விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய திரு ஜெலன்ஸ்கி, பேச்சு வார்த்தை நடத்தவுள்ள யுக்ரைன் தூதுக்குழுவில் தங்கள் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் **Andrii Sybiha**, ரஷ்ய தரப்பில் அந்நாட்டு வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் **Maria Zakharova** தலைமையிலான குழு பங்கேற்க உள்ளதாக தெரிவித்தார்.

அவர்களும் இஸ்தான்புல் நகர் சென்றடைந்துள்ளனர்.

**Maria Zakharova** செய்தியாளர்களிடம் பேசுகையில், பேச்சுக்கள் நேரடியாக நடத்தப்பட வேண்டும் என்றும், நிபந்தனைகள் ஏதும் இன்றி விரைந்து முடிக்க வேண்டும் என ரஷ்ய அதிபர் திரு வினாடிமீர் புட்டின் தங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

பிரான்சில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – அமெரிக்காவின் **Robart Galloway** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-0, 7-6 என்ற செட் கணக்கில் சுவிட்சர்லாந்தின் **Jakub Paul -** நெதர்லாந்தின் **David Pel** இணையை வென்றது.

**----------------**

ஆசிய செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nihal Sarin** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**<<<<<<END>>>>>**